**றம்புக்கன பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 17 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் றம்புக்கன பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மூலதன உதவி மற்றும் மூலதனம் செலவினம் ரூபா 461,569 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானம், செலவினத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 இன் ஆண்டிறுதி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் ரூபா 499,502 இனால் கடன் கொடுத்தோர் மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு இருந்தமையால் கடன்கொடுத்தோர் மீதி அத்தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய கடன் கொடுத்தோர் ஏற்பாட்டை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 இன் ஆண்டிறுதி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய நீதி மன்ற தண்டப்பண வருமானம் ரூபா 745,694 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 இன் ஆணடிறுதி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 04 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்களின் மீதிகள் மற்றும் உபயோகப் பதிவேடு பிரகாரம் மீதிகளிற்கிடையில் கூட்டுத்தொகை ரூபா 5,684,963 ஆன மொத்த வித்தியாசமொன்று காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மிதிகளை குறித்த உபயோக பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்ய வேண்டும். | பரிசோதித்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைதுவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) | 24 (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | 2011 ஆண்டின் பின்னர் பாதைகள் பதிவேடு நாளாதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை | சட்டத்தின் ஏற்பாடு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதை பதிவேட்டை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்ட்டுள்ளது. |
| (ii) | 149 பிரிவு | இலங்கை சுற்றுலாத் துறை சபையில் பதியப்பட்டுள்ள 03 ஹோட்டல்களிலிருந்து 1 சதவீதம் வரையான கட்டணம் ரூபா 1,233,395 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் ஹோட்டல்கள் தொடர்பாக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (iii) | 158 (1) (ஆ) உபபிரிவு | ஓராண்டை விஞ்சிய காலம் முதல் தனியார் ஆதனத்திற்காக அறவிடப்படாத ரூபா 241,143 ஆன வீத வரியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிட முடியாத பணம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | 571 (2) | 2006 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலத்திற்குரிய பெறுமதி ரூபா 2,183,602 ஆன காலாவதயான வைப்புகள் தொடர்பாக | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | நி.பி 571 (2) பிரகாரம் காலம் கடந்த வைப்புகளை வருமானத்திற்கு எடுக்க விடயப் பொருப்பு அலுவலர்களை அறிவூட்டியதாகவும், இது வரை ரூபா 1,858,521 ஆன தொகையை |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 24,858,197 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 28,461,090 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் குத்தகை | 6,681,613 | 4,690,572 | 4,572.440 | 815,102 | 6,186,286 | 5,697,341 | 5,397,065 | 1,077,221 |
| வாடகை | 12,007,295 | 13,481,206 | 13,076,706 | 1,231,848 | 11,912,975 | 11,800,805 | 11,322,271 | 1,011,890 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,317,500 | 3,249,249 | 3,244,219 | 82,789 | 4,423,360 | 4,580,776 | 4,497,987 | 82,789 |
| ஏனைய வருமானம் | 52,854,422 | 37,575,487 | 16,875,313 | 26,257,772 | 25,614,500 | 69,093,287 | 18,272,664 | 52,413,213 |

#### 2.2.2 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 113,781 ஆனதுடன், அவற்றில் ஓராண்டு காலத்தை விஞ்சிய அறவிட வேண்டிய மீதி ரூபா 99,370 ஆனது. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். | ஓராண்டு காலத்தை விஞ்சிய மீதியிலிருந்து ரூபா 72,116 இனை பிரதேச செயலகத்துடன் தொடர்புபட்டு பதிவழிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் எஞ்சிய மீதியை 2020 வருடத்தினுள் அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 கடை அறை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை கடை அறை வாடகை மீதி ரூபா 671,296 ஆன போதும், 2020 ஆண்டில் அவற்றில் ரூபா 20,150 அறவிடப்பட்டிருந்தது. ஒராண்டை விஞ்சிய அறவிட வேண்டிய மீதி ரூபா 269,496 ஆக காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 திசெம்பர் 19 திகதி நடைபெற்ற கேகாலை மாவட்ட கணக்காய்வு முகாமைத்துவ குழுயில் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அங்கு தொழிநுட்ப அறிக்கை ஒன்றை பெற்று அவ்வறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டதால், அதன் பிரகாரம் முன் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.4 சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1988 இலக்கம் 56 மற்றும் 2000 இலக்கம் 53 கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இலக்கம் 47 கொண்ட சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரகாரம் காலம் கடந்ததிருந்த 45 சுற்றாடல் அனுமதி பத்திரங்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்காததனால் சபைக்கு ரூபா 180,000 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | காலாவதியான அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து அனுமதிப்பத்திரதாரர்களுக்கும் புதுப்பிப்பதற்காக எழுத்து மூலம் அறிவூட்டியுள்ளதுடன், புதுப்பிக்கப்படாத கைத்தொழில்களிற்காக மீண்டும் அறிவிக்க நடவடிக்கை எடப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெறாது அனுமதியின்றி நடாத்திச் செல்லும் கைத்தொழில்களை இனங்கண்டு ஒழுங்கமைப்பதனூடாக அக் கைத்தொழிலிற்காக அனுமதிப்பத்திரம் வழங்க ஒழுங்கான முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | சுற்றாடல் சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | களப்பரிசோதனையின் போது இனங்காணப்பட்ட அனுமதியற்ற கைத்தொழிலில்களிற்காக பதிவேடொன்றை நடாத்த தற்போது நடவடிக்கை எடுப்பதாகவும், அக் கைத்தொழில்களை சட்ட ரீதியாக்க தேவையான நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

**2.2.5 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,442,361 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 23,815,095 ஆனதுடன் ஓராண்டை விஞ்சிய அறவிட வேண்டிய மீதி முறையே ரூபா 1,742,183 மற்றும் ரூபா 3,815,095 ஆகக் காணப்பட்டது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். | நீதி மன்ற தண்டப்பணம் / முத்திரைக் கட்டணம் தொடர்பாக குறித்த நிறுவனங்கள் தொடர்ந்து அறிவூட்டல் செய்யப்பட்ட போதும் மீளாய்வாண்டிற்கு உரிய பணம் சபைக்கு கிடைப்பது அவ் ஆண்டில் இல்லை என அறிவிக்கிறேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| றம்புக்கன பிரதேச சபை அதிகார எல்லையினுள் வாகனங்கள் நிருத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் முறையாக்கும் உப விதி 2005 ஜுலை 15 ஆம் திகதிய வர்த்தமாணி ஊடாக பிரசுரிக்கப்பட்டு இருந்த போதும் அவற்றின் குறிப்பிட்டிருந்தவாறு விதித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்காததனால் ரூபா 222,256 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | உப விதியை விதித்து வருமானத்தை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பின்னவல யாணைகள் சரனாலயத்திற்கு அருகில் வாகனங்கள் நிருத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் முறையாக்கல் நடைபெறுவதாகவும், வர்தமாணி அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய வாகன தரிப்பிடங்கள் சபைக்கு சொந்தமில்லாததால் அறவீடுகள் தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

(ஆ) **திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) சபை அதிகார பிரதேசத்தில் ஒன்று சேறும் கழிவுகள் மூலம் கொம்போஸ்ட் உற்பத்தி செய்து எஞ்சுகின்ற கழிவுகளை வெளியிடுவதும் அக் காணியினுள்ளயே முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கழிவுகளை வெளியிடுவது முறையாக மேற் கொள்ளப்பட வேண்டும். | எஞ்சுகின்ற கழிவுகளை வெளியிடல் தற்போது முறையாக மேற் கொள்ளப்படுவதாகவும், இதற்காக வேறு காணியொன்றை கொள்வனவு செய்வது தொடர்பாக கவனம் செலுத்தி இருப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (ii) பொலிதீன் போன்ற உக்கலடையாத பொருட்களை எரிப்பதற்கு சபைக்கு சொந்தமாக எரிகருவி ஒன்று இருக்கவில்லை. | பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுகாதார ரீதியான கழிவு தடுப்பான் ஒன்றிற்காக கவனம் செலுத்தி அதற்காக காணியொள்றை கொள்வனவு செய்வது தொடர்பாக கவனம் செலுத்தி இருப்பதாக அறிவிக்கிறேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும், அந் நோக்கத்தை அடைந்து கொள்ளவதற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட கால திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளுராட்சி அமைச்சியிலிருந்த மற்றும் சபரகமுவ மாகான சபையிலிருந்து கிடைத்திருந்த ரூபா 57,059,225 பெறுமதியான 24 வாகனங்களை சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த வாகனங்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வாகனங்களை சபைக்கு சுவீகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானங்கள் மற்றும் பதில் வழங்கப்படாத கணக்காய்வு ஐயவினா**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடங்கிய சபைக்கு சொந்தமான 01 ஏக்கர் 39.67 பர்சஸ் ஆன 04 காணி துண்டுக்களின் பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 04 காணித் துண்டுக்களின் பெறுமதியை புதிய மதிப்பீட்டின் பிரகாரம் 2020 ஆண்டில் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 ஆண்டு முதல் றம்புக்கன நகர அபிவிருத்தி அதிகார சபை எனும் பெயரில் நடைமுறை பொறுப்பின் கீழ் காட்டப்படும் ரூபா 76,704 ஆன மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடைமுறை பொறுப்பு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் இறுதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது மேலும் கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |